மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய முடிவுதான் இறுதியானது. அது சரிதானா, தவறா என்று தாங்கள் கேட்க முடியாது. அனுமதித்திருக்கலாம் அல்லது மற்றதையும் பார்த்து நான் செய்திருக்கலாம்.

திரு. துரை முத்துசாமி : 41-வது விதியின் கீழ் நீங்கள் கொடுத்த தீர்ப்பு சரிதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரிதான் நான் சொல்வது தான் தீர்ப்பு இதற்கு மேலே ஒன்றும் இல்லை.

திரு. துரை முத்துசாமி : 7-ந் தேதி மானியம் முடிந்து விட்டது. 8-ம் தேதி எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்வது. இலாகாவின் கவனக் குறைவால் இருக்கலாம். 7-ம் தேதியே மானியம் முடிந்து விட்டது.

திரு. நா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அத்தனைக்கும் பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிப்பதால்தான் இந்தப் பிரச்னை வருகிறது. நீங்கள் உட்காருங்கள் என்னுடைய பிசினசை முடித்து விடுகிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : பாயின்ட் ஆப் ஆர்டர். . . 41-வது விதியின் கீழ். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

(3) கவன ஈர்ப்பு.

ஏற்றுமதி செய்யும் பருத்தித் துணியின் அளவினை நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, 1978-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ம் தேதியிடப் பெற்ற வர்த்தகக் கட்டுப்பாட்டு ஆணையின்படி பருத்தித் துணிகள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுமதி செய்யும் அளவினை நிர்ணயம் செய்துள்ளதன்

விளைவாக கைத்தறி ஏற்றுமதியாளரின் முன்னேற்ற வாய்ப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதும், அதனால் ஆயிரக்கணக்கான நெசவாளர்கள், தையல்காரர்கள் வேலையிழந்துள்ள நிலை குறித்து, மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, 1976-ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து கைத்தறி உடைகள் ஏற்றுமதி 870 இலட்சம் உருப்படிகள் என்ற ஓர் உயர் நிலையை அடைந்தது. இது இந்தியாவில் மொத்த ஆயத்த உடைகள் ஏற்றுமதியில் 71 விழுக்காடாகும். இதனால் தமிழ்நாட்டில் அதிக அளவு வேலை வாய்ப்பு கிடைத்தது. ஆனால் 1977-ல் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒருதலையாக விதித்த அளவு கட்டுப்பாட்டினால், கைத்தறி ஆடைகள் ஏற்றுமதியில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டது. மீண்டும் 1978-ல் கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் பங்கு ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த பங்கு ஒதுக்கீட்டில் கைத்தறி, விசைத்தறி, ஆலைத்துணி ஆகியவற்றிற்குள் தயாரிக்கப்பட்ட ஆடைகளை பாகுபாடு செய்யவில்லை. இம்மாதிரியான ஆடைகளை தயாரிக்கும் பல்வேறு துறையினருக்கு இந்த ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவிடம் (Tex proci) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி ஒதுக்கீட்டை பங்கிட்டளிப்பதைப்பற்றி அதிக அளவில் கைத்தறி உற்பத்தி செய்யும் மாநிலங்களை கலந்தாலோசிக்கப்படவில்லை. கைத்தறியா, விசைத்தறியா அல்லது ஆலைத் துணியா என்ற வேறுபாட்டைக் கருதாமல் ரூபாய் 40-க்கும் அதற்கு அதிகமாகவும் விலையை கோருபவர்களுக்கு பங்கு (Tex procil) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விரவிதமான ரகங்களும், நியாயமான விலையுமே கைத்தறியின் முக்கிய அம்சங்களாகும். ஒருதலைப்பட்சமாக ரூபாய் 40-ம் அதற்கு அதிகமாகவும் விலையுள்ள உடைகள் என அறிவிக்கப்பட்டது கைத்தறி துறைக்கு ஓரவஞ்சனை புரிந்ததாகும். ஏனெனில் கைத்தறி ஆடைகளின் சராசரி விலையே ரூபாய் 15-லிருந்து ரூபாய் 20-தான். கைத்தறி தொழிலை பாதுகாக்கவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஒதுக்கீட்டில் கைத்தறி துறைக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பங்கை பெறவும் இந்த அரசு மத்திய அரசுக்கு கீழ்க்கண்ட முறையீடுகளை அனுப்பியுள்ளது.

(அ) கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லா ரக ஆடைகளையும் ஒன்றாக சேர்த்தாலும், கைத்தறித் துறையில் கடந்த கால செயல்பாட்டின் அடிப்படையில் இத்துறைக்கு மொத்த பங்கீட்டில் 70 விழுக்காடு ஒதுக்கப்படவேண்டும்.

(ஆ) கைத்தறி மேம்பாட்டு ஆணையர், கைத்தறி தொழில் நிறுவனங்கள், கைத்தறி நெசவாளர்களை மிகுதியாக கொண்ட மாநிலங்கள் ஆகியோருடன் கலந்து ஆலோ

சித்து, கைத்தறித்துறையின் ஒதுக்கீட்டுக்குள் கைத்தறி ஆடைகளின் 'அடிப்படை விலை', 'வரம்பு விலை' ஆகியவற்றை நிர்ணயிக்கவேண்டும்.

(இ) உறுதியான ஏற்றுமதி ஒப்பந்தங்களை பெற்றுள்ள உண்மையான ஏற்றுமதியாளருக்கு பங்கீட்டில் முன்னுரிமை அளிக்கவேண்டும.

என்று தக்க நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, மத்திய அரசு இதை ஒரு தலைப்பட்ச முடிவாக எடுத்து இருக்கிற காரணத்தால் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் இருந்து தெரிகிறது. இந்த முடிவுகளையும், பரிந்துரைகளையும் மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்த பிறகு, தொடர் நடவடிக்கையாக என்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு இருக்கிறது? மத்திய அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு இந்த அரசு ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறதா? அப்படி என்றால், அதனுடைய விளைவுகள் என்ன, இதுவரையில் இல்லாவிட்டால், எப்போது நடத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி வளர்ச்சிக் குழுவின் ஆணையர் திரு. மணி நாராயணசாமி அவர்கள் சென்னைக்கு வந்து இருக்கிறார்கள். இன்று 11 மணிக்கு மத்திய அரசின் அந்த அலுவலரிடமும், மற்ற மாநில அரசு அதிகாரிகளிடமும் கலந்து ஒரு கூட்டத்தை இன்று நடத்த இருக்கிறோம். அந்தக் கூட்டத்திலே இந்தப் பிரச்சனைகள் பற்றி மீண்டும் விவாதித்து, மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, கைத்தறி ஏற்றுமதித் துறையில் இன்று ஏற்பட்டு இருக்கும் இந்த நெருக்கடி தவிர்க்கப்படும். அந்த முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(4) அரசினர் தீர்மானம்.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, 1959-ம் ஆண்டு, தமிழ் நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியின் கீழ், வேளாண்மைத் துறையில் 1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம்